**தலைப்பு 8 - தேசிய பொலிஸ் ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டு அதிகாரச்சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று தேசிய பொலிஸ் ஆணைக்குழுவால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக் கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், செயற்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வின் நோக்கெல்லை

---

தலைப்பு 8 - தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடுதல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக்கொண்டு உரிய தரப்பினரிற்கு செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 20 ஆம் திகதி ஆணைக்குழுவின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக்கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள்

மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.5 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது வெளிப்படுத்தப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிப்பொறுப்பு | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| **நிதிப்பிரமாணம்** | | | | |
| 127(1)(அ) | சரியான மற்றும் நிதி ஒழுங்கு முறையாக செய்யப்படுவதாக உறுதிப்படுத்தப்படும் வகையில் சகல நிதிச் செயற்பாடுகளும் திட்டமிடப்பட வேண்டும். (திணைக்களத்தின் நடவடிக்கைகளை நிதி மற்றும் திணைக்களத்தின் கட்டளைகளுக்கு இணங்க மாத்திரமல்லாமல் கடமைகளை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட உயர்தர நேர்மையுடன் நடைபெறல் வேண்டும்) | | மிகை நிதியேற்பாடு | 2.3 |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பான போதியளவு கட்டுப்பாட்டிற்கு ஏற்பாடுகள் தயாரிக்கும் முறைமையொன்று தோற்றுவிக்கப்பட வேண்டும் | 1. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தோற்றுவிக்கப்படாமை | 2.4 |
| | | 2. | மனித வளங்கள் முகாமைத்துவத்திலுள்ள குறைபாடுகள் | 2.5 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான | 1. | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் பெறப்பட்டிருக்காமை | 2.1.4 |
| | | 2. | தாபன மற்றும் ஒழுக்காற்றுக் | 2.1.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | முன்மொழிவுகளை சிக்கனமாகவும் செயற்திறனான வகையிலும் அமைச்சில் பரிசீலனைக்கு உட்படுத்துதல். | | கட்டுப்பாட்டின் செயலாற்றலிலுள்ள குறைபாடுகள் | |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் அவர் தனது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு விடப்படுகின்றதெனவும் | 1. | பொதுமக்கள் முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதிலுள்ள தாமதங்கள் | 2.1.1 |
| | | 2. | பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்படாமை. | 2.2 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தரால் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அவற்றை கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சில் பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதியேற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்தில் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படுதல். | | வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை | 2.1.5 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 பொதுமக்களின் முறைப்பாடுகளை புலனாய்வு செய்வதிலுள்ள தாமதங்கள்

2015 ஒக்தோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களிற்கிடையே குறைகளை நிவர்த்தி செய்து வழங்குவதற்காக பொதுமக்களின் முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் பிரதான தொழிற்பாடாக காணப்பட்டது. உரிய தொழிற்பாட்டை ஆற்றுவதற்காக தனியான பொதுமக்கள் முறைப்பாட்டு புலனாய்வுப் பிரிவொன்றை ஆணைக்குழு ஸ்தாபித்திருந்தது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் தொடர்பான மீளாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| முறைப்பாடுகளின் தன்மை | 2016 | | 2017 | | தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகளின் சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | பெறப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை | |
| பொலிஸினால் நடவடிக்கை எடுக்கப்படாமை | 737 | முறைப்பாடுகளின் தன்மையின் பிரகாரம் தீர்வுகாணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை தொடர்பாக வகைப்படுத்தல ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 480 | 249 | 52 |
| தாக்குதல் | 46 | | 33 | 13 | 39 |
| சித்திரவதை செய்தல் | 18 | | 04 | - | - |
| அதிகாரத்தை முறையற்ற வகையில் பயன்படுத்துதல் | 486 | | 377 | 220 | 58 |
| பெண்களையும் சிறுவர்களையும் துன்புறுத்துதல் | 09 | | 08 | 03 | 38 |
| சட்டரீதியற்ற வகையில் தடுத்துவைத்தல் | 51 | | 45 | 37 | 82 |
| இலஞ்ச ஊழல் | 10 | | 13 | 01 | 7 |
| பக்கச்சார்பு | 257 | | 256 | 112 | 44 |
| பொய்க்குற்றம் சாட்டுதல் | 112 | | 91 | 42 | 46 |
| பொலிஸ் கைது செய்த நிலையில் மரணம் ஏற்படல் | 03 | | 03 | - | - |
| ஏனையவை | 150 | | 156 | 79 | 51 |
| **மொத்தம்** | **1,879** | **971** | **1,466** | **756** | **51** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகமான பொதுமக்கள் முறைப்பாடுகள் பொலிஸால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத மற்றும் அதிகாரங்களை தவறாக பயன்படுத்தியது தொடர்பான முறைப்பாடுகளாக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும் பக்கச்சார்பு தொடர்பான பொதுமக்கள் முறைப்பாடுகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினை போல் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் பெறப்பட்ட 1,466 தொகையான முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கையில் 416 முறைப்பாடுகள் மேல் மாகாண அலுவலகத்திற்கு பெறப்பட்டிருந்ததுடன் 119 முறைப்பாடுகளிற்கு மாத்திரமே தீர்வு காணப்பட்டிருந்தன. தீர்வு காணப்பட்ட முறைப்பாடுகளின் சதவீதம் 28 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தி மிகவும் தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 2.1.2 ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி வறிதாக்கல் தொடர்பாக தீர்வு காணப்படாத மேன்முறையீடுகள்

---

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் பதவி வறிதாக்கல் தொடர்பாக தீர்வு காணப்படாத மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 1,766 ஆகக் காணப்பட்டதுடன் அதில் 346 மேன்முறையீடுகள் 2 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக தீர்வு காணப்பட்டிருக்கவில்லை. மேன்முறையீடுகள் தொடர்பான வயதுப் பகுப்பாய்வுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| மேன்முறையீடுகளின் வகை | 01 ஆண்டிற்கு மேற்பட்டது | 1 – 2 ஆண்டுகளிற்கு இடையிலானது | 02 ஆண்டுகளிற்கு மேற்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஒழுக்காற்று நடவடிக்கை | 621 | 75 | 133 | 829 |
| பதவி வறிதாக்கல் | 613 | 144 | 213 | 970 |
| | 1234 | 219 | 346 | 1799 |

### 2.1.3 நிறுவன ரீதியான மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு

---

இலங்கை பொலிஸின் சீருடைப் பதவியணியினர் மற்றும் உதவிப் பதவியணியினருக்குரிய முறையே 06 மற்றும் 105 ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் சீருடைப் பதவியணியினருக்குரிய 01 ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டமும் உதவிப் பதவியணியினருக்குரிய 09 ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வுத் திட்டங்களும் 2018 யூன் 30 வரையிலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1.4 எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஒக்தோபர் 30 இல் கைச்சாத்திடப்பட்ட ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதியிடப்பட்டு அமுல்படுத்தப்படுகின்ற Catalytic Support to Peace Building செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொதுமக்கள் அபிப்பிராயங்களை பெற்றுக்கொள்ளும் 03 அமர்வுகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஒரு அமர்வு மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரியிடமிருந்து 2017 திசெம்பர் 08 இல் மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்திற்காக ரூபா 1,100,000 மேலதிக நிதியேற்பாடுகள் பெறப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 143,526 தொகை அல்லது 13 சதவீதம் செலவிடப்பட்டிருந்ததுடன் திறைசேரி வைப்புக் கணக்கிற்கு ரூபா 956,474 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.1.5 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்த பின்னர் 150 நாட்களினுள் ஆணைக்குழுவால் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ் அறிக்கை 2018 யூலை 31 வரையிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அது தொடர்பான அறிக்கை 2018 மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ் அறிக்கைகள் 2018 யூலை 31 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. பொருள் மெய்மையாய்வுச் சபை 2018 சனவரி 23 இல் நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும் மெய்மையாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 கடமைப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலப்பகுதியின் போது ஆணைக்குழுவிற்கு மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகள், பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| **2013** | மீண்டுவருபவை | 40.0 | 39.7 | 0.3 | 0.8 |
| | மூலதனம் | 5.3 | 5.2 | 0.1 | 1.9 |
| | **மொத்தம்** | **45.3** | **44.9** | **0.4** | **0.9** |
| **2014** | மீண்டுவருபவை | 43.9 | 42.3 | 1.6 | 3.6 |
| | மூலதனம் | 0.9 | 0.7 | 0.2 | 22.2 |
| | **மொத்தம்** | **44.8** | **43.0** | **1.8** | **4.0** |
| **2015** | மீண்டுவருபவை | 45.7 | 40.4 | 5.3 | 11.6 |
| | மூலதனம் | 1.4 | 0.8 | 0.6 | 42.9 |
| | **மொத்தம்** | **47.1** | **41.2** | **5.9** | **12.5** |
| **2016** | மீண்டுவருபவை | 85.8 | 82.6 | 3.2 | 3.7 |
| | மூலதனம் | 3.1 | 2.7 | 0.4 | 12.9 |
| | **மொத்தம்** | **88.9** | **85.3** | **3.6** | **4.0** |
| **2017** | மீண்டுவருபவை | 97.2 | 94.7 | 2.5 | 2.6 |
| | மூலதனம் | 3.9 | 2.5 | 1.4 | 35.8 |
| | **மொத்தம்** | **101.1** | **97.2** | **3.9** | **3.9** |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டில் 02 மூலதன செலவின விடயத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 230,000 தேறிய நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2016 சனவரி 28 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1)(i) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 2009 யூன் 09 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் ஆணைக்குழுவால் முகாமைத்துவக் கணககாய்வுக் குழு தோற்றுவிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

ஆணைக்குழுவின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே தரப்படுகின்றன. ஆணைக்குழுவினால் ஆளணி வேதனங்கள் செலவின தொகுதிக்காக ரூபா 50.75 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | ------------------ | --------------------- | -------------------- | ----------------- |
| (i) | சிரேஷ்ட மட்டம் | 29 | 28 | 01 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 05 | 04 | 01 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 63 | 51 | 12 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 16 | 16 | - |
| | | ------- | -------- | -------- |
| | **மொத்தம்** | **113** | **99** | **14** |
| | | ===== | ===== | ===== |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 14 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆணைக்குழுவின் தொழிற்பாடுகளை தடையேதுமின்றி நிறைவேற்றுவதற்குத் தேவையான உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி தொடர்பாக நிரந்தர அடிப்படையில் 101 ஊழியர்களையும் ஒப்பந்த அடிப்படையில் 12 ஊழியர்களையும் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிரந்தர அடிப்படையில் 55 ஊழியர்களும் ஒப்பந்த அடிப்படையில் 44 ஊழியர்களும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். இதனால் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டிய 32 ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.